# கிறிஸ்துநாதர் ஆலயம்

54, முகம்மது மாக்கன் மாக்கர் மாவத்தை, காலிமுகம், கொழும்பு 03.

**வர்த்தமானி** | 2023 மார்ச் (பங்குனி) | மலர் 96 இதழ் 03



## இம்மாத வாக்குத்தத்த வசனம்

"மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்."

ரோமர் 6: 4


**முகாமை குரு:**
அருட்பணியாளர் கிறிஸ்டி ஜோசப்
011-2422878, 077 756 7178

**உதவி குரு:**
அருட்பணியாளர் பிரையன் பெர்னாண்டோ
011-2325166, 077 220 6214

**கிறிஸ்துநாதர் ஆலய காரியாலயம்: 0114 292 878**


**குருவானவர் பிரதிநிதி மூப்பர்**
திரு. கிறேஷன் மோசஸ் - 077 7388 511

**மக்கள் பிரதிநிதி மூப்பர்கள்**
திரு. சுரேஷ் ஜெபமணி - 077 736 2388
திரு. போல் போல்ராஜ் - 077 344 5563
திரு. சஞ்சீவ் பாலன் - 077 368 6553

**சபைக் காரியதரிசி:**
திருமதி. அஷானி ஜோன் - 077 385 3960

**தனாதிகாரி**
திரு. டென்வர் பாலன் - 077 694 4500

**சகாய நிதி மேற்பார்வையாளர்**
திரு. தேவநேசன் - 077 446 7777

**ஆலய மண்டப பராமரிப்பாளர்**
திரு. குமார் பாலன் - 077 732 1515

**தாய்மார் சங்கம்**
**தலைவி** : திருமதி. ரெபேக்கா எட்வட் - 077 710 3315
**காரியதரிசி** : திருமதி. ஏன்ஜலின் ஜோன் - 077 774 3303

**ஆடவர் சங்கம்**
**தலைவர்** : திரு. குமார் பாலன் - 077 732 1515
**காரியதரிசி** : திரு. தேவநேசன் - 077 446 7777

**வாலிபர் சங்கம்**
**தலைவர்** : திரு. டேமியன் பாலன் - 077 260 2102
**காரியதரிசி** : திரு. ஜொனத்தன் நித்தியானந்தன் - 071 444 9255

**ஓய்வுநாட் பாடசாலை**
**அதிபர்** : திருமதி. உமா மெக்ஸிமஸ் - 077 340 1667

**திருப்பணி குழு**
**தலைவர்** : திரு. ஜோன்சன் மாணிக்கம் - 077 239 6161
**காரியதரிசி** : திருமதி. ரூபினி ஞானசேகரம் - 077 783 2603

# சபை முகாமைக் குருவின் மடல்!

அன்புள்ள சகோதர சகோதரிகளே மற்றும் பிள்ளைகளே !

இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள்

நண்பர்களே, நாம் இன்னுமொரு புனிதமான தவக்காலத்திற்குள் காலடியெடுத்து வைக்கப்போகிறோம். தவக்காலத்தின் 40 நாட்களில் நாம் உபவாசிக்கவும், பிரார்த்தனை செய்யவும், தேவையிலுள்ள மக்களுக்கு உதவவும் அழைக்கப்பட்டுள்ளோம். எனவே நமது உடன்படிக்கைகள் மற்றும் வாக்குறுதிகள் அனைத்தையும் சிந்தித்துத் தியானிப்பது நமக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தவக்காலமானது மிகவும் புனிதமான ஓர் காலமாகும். இந்நாட்களில் நம்மைப் படைத்த கடவுளுக்கு முன்பாக அவருடைய சாயலை உண்மையாக நாம் வெளிப்படுத்துகின்றோம். கடவுளின் சாயல் உண்மையாக என் மேல் வெளிப்படுகின்றதா? என்பதை நாம் நேர்மையாக உணர முயற்சிக்க வேண்டும். யோவேல் 2: 1-2 , 12-17 மற்றும் ஏசாயா 58: 1 -12 ஆகிய வேத வசனங்களை வாசிக்கவும், சிந்திக்கவும் உங்களை ஊக்குவிக்க விரும்புகிறேன்.

கர்த்தராகிய இயேசு சாத்தானால் சோதிக்கப்பட்டார், ஆனால் சாத்தானைத் தோற்கடித்து பிதாவின் சாயலையும் மகிமையையும் வெளிப்படுத்தினார். அவர் மீண்டும் சாத்தானின் சக்திகளாலும், ஆட்சியாளர்களாலும் சிலுவையில் அறையப்பட்டார். ஆனால் பிதா அவரை மரணத்தில் இருந்தும் கல்லறையிலிருந்தும் எழுப்பினார். மேலும் அவர் மூலம் அனைத்து மனிதக் குலத்திற்கும் மகிமை, மற்றும் இரட்சிப்பின் வாசலையும் திறந்தார். எனவே மரணத்தை ஜெயித்து நித்திய ஜீவனைத் தர வல்ல கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம். இவ்வுலகில் சாத்தானால் பலவழிகளிலும் சோதிக்கப்படும் அனைவருக்கும் ஜெயத்தையும், வல்லமையையும், பலத்தையும் கொடுக்க வல்லவர் கிறிஸ்து ஒருவரே. இன்றைய சமூகத்தில் காணப்படும் தீய சக்திகளாவன சுகவீனங்கள், குடும்பத்தில் பிரிவினைகள், பிள்ளைகளுக்கிடையிலான பிரிவினைகள், சீரழிந்த சமூக அமைப்பு மற்றும் நேர்மையற்ற துரோக அரசியல் கலாச்சாரம், போதைக்கு அடிமையாதல், இலாப நோக்கான மனப்பான்மை, சட்டம் ஒழுங்கை மீறுதல் என்பவையாகும். பாராளுமன்ற சபை தேர்தல் எமது நாட்டில் நடைபெற இருக்கின்றது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. நாம் இங்கே ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும். நாம் வாக்களிக்க ஒரு வேட்பாளரைத் தேர்வு செய்ய வேண்டும். அரசியல் வட்டாரத்தில் நடைபெறும் விடயங்களைப் பார்க்கும்போது, இன்று பல பாராளுமன்ற வேட்பாளர்கள் ஊழல் நிறைந்தவர்களாக இருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. மத மற்றும் மதச்சார்பற்ற அனைத்து ஊழல்களையும் நீக்கப் பிதா தமது குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பிய நோக்கத்தை உண்மையாகவே நிறைவேற்ற நமது ஜெபங்கள் மிகவும் அவசியமானதாகும்.



கிறிஸ்தவர்களாகிய நாம் நமது வாக்குறுதிகளையும், உடன்படிக்கைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். இந்த கடுமையான சூழலில் நம்மைப் பலப்படுத்தி ஆறுதல் அளிக்கும், கஷ்டங்களில் எம்மை தூக்கிச் சுமக்கும், இருளின் மத்தியில் நம்மை வெளிச்சத்திற்கு அழைத்துச் செல்லும் கடவுளின் கரங்களை நாம் இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும். கடவுளின் அளவில்லாத அன்பு நம் மனதையும் எண்ணங்களையும் ஒருமுகப்படுத்தி, நீதி மற்றும் அமைதியால் பலப்படுத்தப்பட்டு அதிகாரம் பெற இந்த தவக்காலத்தைப் பயன்படுத்துவோம்.

இத் தவக்காலமானது உங்களுக்கு ஒரு புனிதமான மற்றும் ஆசீர்வாதமான தவக்காலமாக அமைய எனது வாழ்த்துக்கள்.

**வண: கிறிஸ்டி ஜோசப் -** முகாமை குரு,
கிறிஸ்து நாதர் ஆலயம், கொழும்பு 03

# சபை அறிவித்தல்கள்



## லெந்து கால தியான வழிபாடு

**லெந்து நாட்களில்**
**வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு**
**ஆலயத்தில் நடைபெறும்**

**லெந்து கால தியான கருப்பொருள்கள்:**

1. சோதனைகளின் மத்தியில் கடவுளின் வாக்குறுதி.
2. பிளவுபட்ட சமுதாயத்திற்காக இயேசுவின் மன்னிப்பு.
3. கொல்கொத்தா செல்லும் வழியில் இயேசுவின் அன்பு. (தாய்மார் வாரம்).
4. கெத்செமனேயில் தீர்மானம்.
5. சிலுவையில் ஜீவனை விடுத்து, உயிர்த்தெழுதலில் எழுந்திருத்தல்.

## சுவிசேஷ பிரபல்ய சங்கம்

1) ஞாயிறு ஆராதனையின் பின்னர் காலை 10:30 மணிக்கு சுவிசேஷ பிரபல்ய சங்கத்தினால் துதி ஆராதனையும் வேத படிப்பும் ஆலயத்தில் நடைபெறும்.

2) ஒவ்வொரு நாளும் இரவு 9:30 மணிக்கு நாட்டுக்காகவும், சபைக்காகவும், நோயாளர்களுக்காகவும் Zoom ஊடாக ஆண்கள் வேறாகவும், பெண்கள் வேறாகவும் ஜெபிக்கின்றார்கள். இதில் நீங்களும் இணைந்து ஜெபிக்கலாம். விபரங்களுக்கு தலைவர் அல்லது காரியதரிசியை தொடர்பு கொள்ளவும். உங்களது ஜெப விண்ணப்பங்களை தெரியப்படுத்தினால் தொடர்ந்து ஜெபங்கள் ஏறெடுக்கப்படும்.




## ஓய்வுநாட் பாடசாலை

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் ஆராதனையின் பின்னர் ஆலயத்தில் ஓய்வுநாட் பாடசாலை நடைபெறும்.

## இம்மாத (மார்ச்) விஷேட நாட்கள்

- 05ம் திகதி உயிர்ப்புக்கு முன்வரும் 5ஆம் ஞாயிறு (தவக்காலம் 2)
- 12ம் திகதி உயிர்ப்புக்கு முன்வரும் 4ஆம் ஞாயிறு (தவக்காலம் 3)
- 19ம் திகதி உயிர்ப்புக்கு முன்வரும் 3ஆம் ஞாயிறு (தவக்காலம் 4) - தாய்மார் ஞாயிறு
- 26ம் திகதி உயிர்ப்புக்கு முன்வரும் 2ஆம் ஞாயிறு (தவக்காலம் 5 - பாடுகள் ஆரம்பம்)

# 2023 மார்ச் மாதத்திற்கான வழிபாட்டிற்குரிய வேதபாடங்கள்

**உயிர்ப்புக்கு முன்வரும் 5ஆம் ஞாயிறு (தவக்காலம் 2) - சுவிசேஷ பிரபல்ய சங்கம்**

| | |
|---|---|
| **05.03.2023** | ஆதியாகமம் 12: 1-4 |
| | சங்கீதம் 121 |
| ஊதா | ரோமர் 4: 1-5, 13-17 |
| | யோவான் 3: 1-17 |

**உயிர்ப்புக்கு முன்வரும் 4ஆம் ஞாயிறு (தவக்காலம் 3) - ஓய்வு நாள் பாடசாலை**

| | |
|---|---|
| **12.03.2023** | யாத்திராகமம் 17: 1 - 17 |
| | சங்கீதம் 95 |
| ஊதா | ரோமர் 5: 1 - 11 |
| | யோவான் 4: 1 - 15 |

**உயிர்ப்புக்கு முன்வரும் 3ஆம் ஞாயிறு (தவக்காலம் 4) தாய்மார் ஞாயிறு - தாய்மார் சங்கம்**

| | |
|---|---|
| **19.03.2023** | 1 சாமுவேல் 1: 20 - 28 |
| | சங்கீதம் 127: 1 - 4 |
| இளஞ்சிவப்பு | கொலோசேயர் 3: 12 - 17 |
| | யோவான் 19: 25 - 27 |

**உயிர்ப்புக்கு முன்வரும் 2ஆம் ஞாயிறு (தவக்காலம் 5 - பாடுகள் ஆரம்பம்) - வாலிபர் சங்கம்**

| | |
|---|---|
| **26.03.2023** | எசேக்கியேல் 37: 1 - 14 |
| | சங்கீதம் 130 |
| ஊதா | ரோமர் 8: 6 - 11 |
| | யோவான் 11: 17-27, 38-46 |




**மார்ச் மாதம் 2023**




பின்வரும் வேதப் பகுதிகளை வாசித்து
**"என் தகப்பனே",**
என்று கூறியது யார் என குறிப்பிடுங்கள்?

1) ஆதியாகமம் 22:
2) ஆதியாகமம் 27:
3) ஆதியாகமம் 27:
4) ஆதியாகமம் 48:
5) நியாயாதிபதிகள் 11:
6) 2 இராஜாக்கள் 2:
7) 2 இராஜாக்கள் 5:
8) 2 இராஜாக்கள் 13:
9) லூக்கா 15:
10) லூக்கா 16:

**2023 பெப்ரவரி மாத கேள்விகளுக்குச் சரியான பதில்களை எழுதியவர்கள்**

திருமதி. வசந்தி ஞானமணி,
திருமதி. ராணி சுபாஷ்,
திருமதி. ரூபிணி ஞானசேகரம்,
திருமதி. ஹெலன் நித்தியானந்தன்,
திருமதி. வில்மா சாம்சன்.

உங்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

**இதற்கான விடைகளை எழுதி மார்ச் 15ம் திகதிக்கு முன்னர் திரு. கிறேஷன் மோசஸ் அவர்களுக்கு (0777-388511) வட்ஸ்அப் (WhatsApp) மூலம் அனுப்பி வைக்கவும்.**